**கெபிதிகொல்லாவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றுகை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொம்போஸ்ட் குவளைகள் மற்றும் கணனி உப பாகங்களுக்காக முறையே செலவிடப்பட்டிருந்த ரூபா 189,976 மற்றும் ரூபா 243,304 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்த காரணத்தினால் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 433,280 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 208,143 பெறுமதியான 188 கல்வனைஸ் குழாய்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 வீதிகள் வாரத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,816,402 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) பிரதான காசேட்டின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 4,867,258 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,644,670 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 222,588 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபையின் நிரந்த பதவியணியினர் சம்பளம் மீள்நிரப்பலின் போது உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து ரூபா 110,775 கூடுதலாக கிடைத்த காரணத்தினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 வீதிகள் வாரத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளின் பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில் கடன்கொடுத்தோராக ரூபா 584,305 குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) சபைக்கு சொந்தமான 13 குத்தகை ஆதனங்களின் வருடாந்த வாடகை வருமானம் ரூபா 3,445,566 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினங்கள் கணக்கில் ரூபா 2,202,767 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் வருமானம் ரூபா 1,242,799 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

02 கணக்கு விடயங்களின் மீதிகளுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டு பட்டோலைகளில் குறிப்பிடப்பட்டுளள மீதிகளுக்கு இடையே ரூபா 43,301 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 79,965 தொகையான பெறவேண்டிய 04 கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 630,941 ஆன 02 செலவு மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 71,510,558 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமிண்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களின் சேவை முடிவடையும் போது அவர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1995 சனவரி 29 ஆந் திகதிய 1/95 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் எவரேனிடமிருந்து பிணை தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை |

**02. நிதி மீளாய்வு**

-----------------------

**2.1 நிதி விளைவுகள்**

---------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விட கூடிய செலவினம் ரூபா 1,687,482 ஆக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 4,129,923 ஆக இருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1** மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வியாபார மற்றும் கைத்தொழில் வரி | - | 210,000 | - | 265,800 | - |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 1,041,473 | 593,490 | - | - | 1,634,963 |
| முத்திரைக் கட்டணம் | 1,073,450 | - | - | - | 1,073,450 |
| குப்பை வரி | - | 300,000 | - | 254,600 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | 350,000 | - | 265,740 | - |
| கடை வாடகை | 82,202 | 876,000 | - | 883,000 | 82,202 |
| வாடகை | 589,084 | 3,488,900 | 397,150 | 1,767,394 | 241,823 |
| மொத்தம் | 2,786,209 | 5,818,390 | 397,150 | 3,436,534 | 3,032,438 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபை செயலாளர் வழங்கிய வருமான சேகரிப்பு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு குத்தகை வாடகை ரூபா 589,084 இல் ரூபா 397,150 தொகையும் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 3,488,900 இல் ரூபா 1,767,394 தொகையும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை பெறுமதி ரூபா 241,823 எனக் குறிப்பிடப்பட்டமையால் செயலாளரினால் வழங்கப்பட்ட வருமான சேகரிப்பு செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி போலியானது என அவதானிக்கப்பட்டது.

## 2.2.3 வீதவரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அசையும் ஆதனங்கள் மற்றும் அசையாத ஆதனங்களின் வருடாந்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட வீதவரி அறவிடப்பட வேண்டிய போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றம் அடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்டு சட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 241,823 தொகையான நிலுவை வாடகை மீதியினுள் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 29,600 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 112,334 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அம்மீதிகளை அறவிடுவதற்கு 2018 ஆகஸ்ட் வரை முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட முத்திரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 1,073,450 மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு இருந்தது.

# 03. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்காக மாகாண சபையினால் பிறப்பிக்கப்பட்டிருந்த 10 உப உறுப்புரைகள் 2018 சனவரி 26 ஆந் திகதிய 2056 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்திலின் கீழ் பிரதேச சபை பின்பற்றியிருந்த போதிலும் அந்த உறுப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் போது 24 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 2,125,969 ஆன நிதியேற்பாடு கிடைத்திருந்த போதிலும் அச்செயற்திட்டங்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களிலிருந்து உக்காத கழிவுப்பொருட்கள் அரசிற்குரிய காணியொன்றில் விடப்பட்டிருந்தது. அக்கழிவுப்பொருட்கள் சுற்றாடலுக்கு விடப்படுவதால் பிரதேசவாசிகளுக்கு சுகாதார சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேருவதும் உக்காத கழிவுப்பொருட்கள் சுற்றாடலில் விடுவிக்கப்பட்டு எரிப்பதால் சுற்றால் சேதங்கள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 44 மயானங்கள், 13 காணிகள் மற்றும் கட்டிடங்களுடன் கூடிய 04 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 97,429 பெறுமதியான 88 கல்வனைஸ் குழாய்களை மீள் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1994 ஆம் ஆண்டு முதல் இருந்துவரும் 05 கடைகளுக்காக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 82,202 ஆன நிலுவை கடை வாடகை மீதியை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்காக 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.3. மனித வள முகாமைத்துவம்**

அங்கீகிக்கப்பட்ட பதவியணியினர் 39 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 21 ஆக இருந்தமையால் 19 ஊழிய வெற்றிடங்களும் மிகை காவலாளி ஒருவருமாக இருந்தனர்.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

சபைக்கு சொந்தமான 15 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் ஒரு நிரந்தர சாரதியொருவரும் அமைய சாரதியொருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் சபை

நடவடிக்கைகளுக்காக வாகனங்கள் தேவையான இயலளவிற்கு பயன்படுத்த முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

**குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபையின் பொறுப்பிலுள்ள 06 வாகனங்கள் மீளாய்வாண்டில் சேவையல் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

05 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 12 சதவீதத்திலிருந்து 117 சதவீதம் வரையான விலகலொன்றும் 06 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றம் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய NCP/CS/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) நிலையான சொத்துக்கள் நாளதுவரையாக்கப்படாமை |
| | (ii) பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | (i). ஒழுங்குபடுத்தல் குறிப்பு தயாரிக்கப்பட்டு தேவையான பதவியணியனரை நிச்சயித்துக் கொள்ளல் |
| | (ii) நியமனங்கள் கிடைக்கப் பெற்றதன் பின் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தாமை. |